**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.219/2024 - PW-7**

| | |
|---|---|
| Name | திரு. ரவிச்சந்திரன் |
| Husband/Father Name | சேட்டு |
| Village /Area | கீழ்வெங்கடாபுரம் |
| Taluk | நெமிலி |
| Occupation | தனியார் வங்கி ஊழியர் |
| Age | 35 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 18.09.2025

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். என்னை நெமிலி போலீசார் விநாயகத்திற்கும் சரவணணிற்கும் சண்டை நடந்ததா என்று கேட்டு என்னிடம் என்னுடைய முகவரியை கேட்டார்கள் இது பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று கூறினேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமுலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்க்ளில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

20.06.2024 ம் தேதி நானும் என் ஊரை சேர்ந்த தக்காளி பிள்ளை மகன் இராமலிங்கமும் ஜீ.கே.டி பெட்ரோல் பங்கில் இருந்தபோது நெமிலி காவல் ஆய்வாளர் எதிரி சரவணனை கைது செய்து விசாரித்து கொண்டிருந்த போது அவர் எந்தவிதமான வற்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என்

முன்னிலையிலும் சாட்சி ராமலிங்கம் முன்னிலையிலும் பதிவு செய்ததாகவும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எங்களை சரவணன் அவரது வீட்டின் பின் மறைத்து வைத்திருந்த கத்தியை அடையாளம் காட்டி எங்கள் முன் ஆஜர் படுத்தியதை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி கொண்டதாகவும் மேற்படி ஆவணங்களில் அதற்கு சாட்சியாக நானும் ராமலிங்கமும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளை காப்பற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.18 17:59:17 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.